## SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

### THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007 / 2008
### HELD IN AUGUST – 2008

### TML 3.15 – MULLTI-CULTURAL TRADITIONS IN THE TAMIL LITERATURE

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. "மதச் சார்பின்மையும் மானுட உணர்வுகளின் வெளிப்பாடுமே சங்க இலக்கியங்களின் பிரதான இயல்புகள் எனலாம்". இக்கூற்றினை விளக்குக.

02. "சங்கம் மருவிய காலப்பகுதித் தமிழகத்தில் பல்வேறு மதப்பண்பாடுகள் சங்கமித்தமையை பதினெண் மேற்கணக்கில் அடங்கியுள்ள அற நூல்களாலும் அக்காலப்பகுதியை ஒட்டித் தோன்றிய காவியங்களாலும் கண்டுணரலாம்" – ஆராய்க

03. "உலகப் பொதுமை வாய்ந்த அற இலக்கியமாகத் திருக்குறள் விளக்குகின்றது". தெளிவுறுத்துக.

04. "தமிழ்ச் சூழலில் பௌத்த மதத்தை வலியுறுத்துவதற்கேற்ற பேரிலக்கியமாக மணிமேகலை திகழ்கிறது". விளக்குக.

05. "தமிழ்மொழியின் செழுமைக்கு சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் கணிசமான பங்களிப்பினை நல்கியுள்ளனர்". தெளிவுறுத்துக.

06. "பல்வேறு மதப்பண்பாடுகளுக்கிடையிலும் ஒருமைப்பாடு காணத்தக்க தன்மை தாயுமானவரின் பாடல்களுக்கு உண்டு". இக்கூற்றினைப் பரிசீலிக்குக.

07. இஸ்லாத்தின் வருகையால் தமிழுக்குக் கிடைத்த புதிய பண்பாட்டு அறிமுகம், இலக்கிய வடிவங்கள், சொற்கள் என்பன தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்குக.

08. "கிறிஸ்தவத்தின் பரம்பல் தமிழின் நவீனமயப்பாட்டுக்கு உதவியுள்ளது". ஆராய்க.

*****